**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 17.06.2025**
**OS. No. 91/2015**
**வழக்கு சாட்சி DW.1–சரவணன் , த/பெ. கிருஷ்ணராஜ் (எ) ராஜிகவுண்டர்**

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

ச.எண்.284/2B11B என்ற சொத்தின் உரிமையாளர் யார் என்றால் அது அரசு நத்தம் நிலம் ஆகும். அதன் நான்கு எல்லைகள் என்ன என்று தெரியுமா என்றால் தெரியும், வடக்கில் என்னுடைய அட்டை வீடும், தெற்கில் என்னுடைய ச.எண்.284/4A நிலமும், மேற்கில் ரைஸ் மில் சிந்தாமணி வகையறா நிலமும், கிழக்கில் எனது ஓட்டு வீடும் அமைந்துள்ளது. கிழக்கிலுள்ள எனது ஓட்டு வீடு ச.எண்.284/2B12 ல் அமைந்துள்ளது, அந்த நிலம் அரசு நத்தம் நிலம் ஆகும். அந்த ஓட்டு வீட்டிற்கு கிழக்கில் வாதியின் தகப்பனாரான என் அண்ணன் சந்திரசேகரின் ஓட்டு வீடு அமைந்துள்ளது. கிழக்கிலுள்ள ஓட்டு வீட்டிற்கு ச.எண்.284/2B11B ல் உள்ள வண்டிப்பாதை வழியாகத்தான் செல்ல வேண்டும் என்றால் சரியல்ல. அந்த வீட்டிற்கு காந்தி சிலை பின்புறம் மேற்கு நோக்கி செல்லும் நத்தம் ச.எண்.334 ல் குறிப்பிட்டுள்ள தடத்தின் வழியாக செல்லலாம். ச.எண்.284/2B11B தென்கிழக்கு மூலையில் நான்கு பைப் லைன் அமைத்துள்ளேன் என்றால் சரிதான், எங்கள் பாகபிரிவினைக்கு முன்பாகவே நான் அமைத்துவிட்டேன். ச.எண்.284/2B12 க்கு தெற்குபுறம் ஒரு பாதை உள்ளது என்றால்சரி தான், 5 அடி பாதை உள்ளது. மேற்படி பாதை ச.எண்.284/2B11B ல் அமைந்துள்ள பாதையின் தொடர்ச்சி என்றால் சரியல்ல. ச.எண்.284/2B11B வண்டிப்பாதையில் எங்களுடைய பைப் லைன் மற்றும் வாதியின் பைப் லைன் அமைந்துள்ளது என்றால் சரியல்ல, எங்களுடைய பைப் லைன் மட்டும் தான் எங்கள் நிலத்தில் அமைந்துள்ளது. நான் சொல்வது தவறானது என்றும், வாதியின் பைப் லைனும் எங்களுடைய நிலத்தில்தான் செல்கிறது என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ச.எண்.284/2B11B ன் தொடர்ச்சியான ச.எண்.284/2B12 ல் அமைந்துள்ள 5 அடி அகல வண்டிப்பாதையில் நான் பைப்

லைன்களை அமைத்து இடைஞ்சல் செய்ததால் தான் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. ச.எண்.284/2B11B ஆனது சுமார் 4 அடி நத்தம் காலி இடம் ஆகும். ச.எண்.284/2B11A ன் தெற்கில் ஒட்டினார் போல் உள்ள இடம் தான் ச.எண்.284/2B11B ஆகும். ச.எண்.284/2B11B ன் தென்வடல் 3.8 மீட்டர், தெற்கே 11.6 மீட்டர், வடக்கே 12 மீட்டர் ஆகும். 3.8 மீட்டர் என்றால் சுமார் 12 அடி வரும் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும ஆவணம் தான் ச.எண்.284 குண்டான புலவரைபடம் என்றால் சரிதான். **மேற்படி புலவரைபடம் வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ச.எண்.284/2B11B ல் உள்ள வண்டிப்பாதை 4 அடி அகலம் என்று நான் சொல்வதற்கு நீதிமன்ற ஆணையர் நியமிக்குமாறு மனு செய்து அளந்து பார்த்தோமா என்றால் இல்லை, அது வண்டிப்பாதை அல்ல, நத்தம் காலி இடம் ஆகும். ச.எண்.284/2B11B ல் மொத்தம் 10 அடிக்கு மேல் வண்டிப்பாதை இருப்பதாக வருவாய் ஆவணங்களிலும், வாதி மற்றும் பிரதிவாதியின் பாக பிரிவினை பத்திரத்திமான வா.சா.ஆ.2 ஆவணத்தில் தெளிவாக குறிப்பிட்டுள்ளது என்றும், நான் வழக்கிற்காக 4 அடி என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கோரிய பரிகாரம் வழங்கி வாதிக்கு ஆதரவாக தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/—திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.